காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 1 (2019)

மேல்நிலை முதலாம் ஆண்டு

கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி --- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது
   அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
   ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
   இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
   ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

3. தவறான கூற்று எது?
   கணக்கேடுகள் பராமரிப்பு என்பது -------
   அ) பண மதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே பதியப்படுவது
   ஆ) கணக்கியல் செயல்பாட்டின் இரண்டாம் நிலை
   இ) விலை நிலை மாற்றங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.
   ஈ) கடந்தகால நிதி விவரங்கள் மட்டுமே பதியப்படுவது

4. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
   அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
   இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

5. தவறான பொருத்தம் எது?
   அ) பற்றுக்குறிப்பு --- விற்பனையாளர் தரவேண்டிய தொகையினைக் குறித்து வாங்குபவர் அளிக்கும் ஆவணமாகும்.
   ஆ) இடாப்பு --- கடன் கொள்முதல் மற்றும் கடன் விற்பனைக்குப் பயன்படுத்தபடுகிறது
   இ) ஆதார ஆவணங்கள் ---- சட்டப்பூர்வமற்ற ஆவணம்
   ஈ) ரொக்கச் சீட்டு ---- ரொக்க விற்பனை

6. வேறுபட்ட ஒன்று எது?
   அ) எடுப்பு அட்டை ஆ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்
   இ) கடன் அட்டை ஈ) தேசிய மின்னணு நிதி பரிமாற்றம்

7. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது எது?
   அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்

8. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவுவைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

9. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

10. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
    அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
    இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

11. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
    அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக்கணக்குகள் மட்டும்
    இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

12. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
    அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
    இ) ஒரு பருவகாலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

13. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்யவேண்டிய ஏடு
    அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
    இ) கொள்முதல் திருப்பஏடு ஈ) உரிய குறிப்பேடு

14. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
    அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
    இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

15. ரொக்கஏடு பதிவு செய்வது
    அ) அனைத்து ரொக்கப்பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
    இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

16. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்கத் தேவை இல்லை?
    அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
    இ) பேரேட்டில் முதல்கணக்கு ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு

17. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
    அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
    இ) சில்லறை ரொக்க ஏடு ஈ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்கஏட்டின் வங்கி பத்தி

18. பொருத்துக :
    i) துணை ஏடுகள் -- 1. தோற்றப் பதிவேடு
    ii) இருப்பாய்வு -- 2. பற்றுஇருப்பு, வரவு இருப்பு
    iii) உரிய குறிப்பேடு -- 3. குறிப்பேடுகளின் பல்வேறு பிரிவுகள்
    iv) குறிப்பேடு -- 4. பொதுக்குறிப்பேடு

	(i)	(ii)	(iii)	(iv)
அ)	2	3	4	1
ஆ)	1	3	4	2
இ)	3	2	4	1
ஈ)	4	2	1	3

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

19. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹ 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?

அ) ₹. 1,950 வரவு இருப்பு ஆ) ₹. 1,950 பற்று இருப்பு

இ) ₹. 2,050 பற்று இருப்பு ஈ) ₹ . 2,050 வரவு இருப்பு

20. பின்வரும் எக்காரணங்களினால் வாடிக்கையாளர், சரக்களிப்பவருக்கு சரக்கினைத் திருப்பி அனுப்புகிறார்?

(i) குறைபாடுள்ள சரக்குகள்

(ii) வாடிக்கையாளருக்கு தாமதமாக சரக்கினை அனுப்புதல்

(iii) தேவைக்கு அதிகமான சரக்குகளை அனுப்புதல்

(iv) சரக்கு மாதிரியிலிருந்து மாறுபட்டிருத்தல்

சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

அ) (iii) மட்டும் தவறு ஆ) (iv) மட்டும் தவறு இ) அனைத்தும் தவறு ஈ) அனைத்தும் சரி

பகுதி - II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. கணக்கியலை வரையறு
22. வணிகத் தனித்தன்மை கருத்து பொருள் தருக.
23. பேரேடு என்றால் என்ன?
24. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?
25. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டை தயாரிக்கவும் :

1) எழில் வியாபாரம் தொடங்கியது ₹. 75,000

2) சரக்கு கொள்முதல் செய்தது ₹. 25,000

3) ஊதியம் வழங்கியது ₹. 27,000

26. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு திருமதி. கீதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயார் செய்க.

2019		₹.
மார்ச்	1. கைரொக்கம்	46,000
	13. வங்கியில் செலுத்தியது	14,000
	25. பங்காதாயம் பெற்றது	7,000
	27. காசோலை பெற்றது	2,000

27. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தருக.

அ) சம்பளம் க/கு ப
 வங்கி க/கு

ஆ) மதன் க/கு ப
 விற்பனை க/கு

28. கணக்கியல் சமன்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

	சொத்துகள்	=	முதல்	+	பொறுப்புகள்
(அ))	?	=	13,500	+	12,000
(ஆ)	27,100	=	17,000	+	?

29. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிய வேண்டும்?

அ) சுமதியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது

ஆ) எழுதுபொருட்களை விற்பனை செய்யும் கஸ்தூரி விற்பனையகம் X நிறுவனத்திற்கு அறைகலன் விற்றது

30. அருண் ₹. 15,000 ரொக்கதுடன் ஒரு தொழிலை தொடங்கும் போது, நிறுவனத்திற்கு ₹. 15,000 ரொக்கமாக கிடைக்கும். அதே நேரத்தில் வணிக நிறுவனம் அருணுக்கு ₹. 15,000 கொடுக்க வேண்டிய பொறுப்பு உருவாகிறது.

1) இக்கருத்து, இரட்டைப்பதிவு முறையில், கணக்கேடுகள் பராமரிப்பு அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறதா?

2) இக்கருத்திலிருந்து உருவாகிய அடிப்படை கணக்கியல் சமன்பாட்டினை எழுதுக.

பகுதி — III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?
32. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.
33. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.
34. ஆனந்த் என்பவர் ஜவுளி வியாபாரம் செய்யும் வியாபாரி. பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2018 இல் குறிப்பேட்டினை தயாரிக்க

ஜனவரி			₹
	1	வியாபாரம் தொடங்க ரொக்கமிட்டது	70,000
	3	வங்கியில் செலுத்திய ரொக்கம்	40,000
	4	அலுவலகப்பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது	5,000
	7	தொண்டு நிறுவனங்களுக்காக துண்டுகள் வழங்கியது	3,000
	9	மாதிரிகளாக வழங்கிய சேலைகளின் மதிப்பு	1,500

35. பின்வருவனவற்றை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்து காட்டுக.

i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 60,000

ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 20,000

iii) ₹. 10,000 மதிப்புள்ள சரக்கினை விற்பனைச் செய்தது ₹. 15,000

iv) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ₹. 500

36. பின்வரும் விவரங்களைக் கொண்டு இருப்பாய்வினை தயார் செய்யவும்.

கணக்கின் பெயர்	தொகை (₹)	கணக்கின் பெயர்	தொகை (₹)
வாடகை	7,000	காப்பீட்டு முனைமம்	1,200
சட்டச் செலவுகள்	3,000	முதல்	11,600
பற்பல கடனாளிகள்	1,500	வங்கி மேல்வரைப்பற்று	1,100

37. திரு. குமாரின் உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

2019			₹.
பிப்	1	காஜோலிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது	25,000
	7	சுனில் நமக்கு சரக்கு விற்றது	9,000
	15	கௌசல்யாவிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது	3,000
	20	சங்கரிடமிருந்து ரொக்கத்திர்கு சரக்கு வாங்கியது	10,000

38. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினைத் தருக.

1) ரொக்கம் ₹.18,000 2) வங்கி ₹. 8,000 3) கடனீந்தோர் ₹. 41,000
4) கணினி ₹.27,000 5) சரக்கிருப்பு ₹. 10,000

39. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2018 டிசம்பர் 31- ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார்செய்க.

(அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹.7,130
(ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹.1,000
(இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹. 800

40. பின்வரும் வாக்கியங்களை ஏற்றுக்கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் 'ஆம்' எனவும், ஏற்றுக் கொள்ளாவிட்டால் 'இல்லை' எனவும் பதிலளிக்கவும்.

(அ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் வங்கியரால் தயாரிக்கப்படுகிறது
(ஆ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் ரொக்க ஏட்டினை சரிகட்டுவது கட்டாயமானது.
(இ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு என்பது மேல்வரைப்பற்றாகும்

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $7 \times 5 = 35$

41. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பேட்டுப்பதிவுகளைக் கொண்டு பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்கவும்.

<u>கண்ணன் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று ₹.	வரவு ₹.
2018 அக்.1	கொள்முதல் க/கு ப வங்கி க/கு (சரக்குகள் வாங்கி காசோலை கொடுத்தது)		30,000	30,000
5	வங்கி க/கு ப விற்பனை க/கு (சரக்குகள் விற்கப்பட்டு தொகை தேசிய மின்னனு நிதிபரிமாற்றம் மூலம் பெறப்பட்டது)		40,000	40,000
11	ரொக்க க/கு ப விற்பனை க/கு (சரக்குகள் விற்று ரொக்கம் பெற்றது)		20,000	20,000
21	பாரதி க/கு ப விற்பனை க/கு (கடன் விற்பனை)		25,000	25,000
30	ரொக்க க/கு ப பாரதி க/கு (பாரதியிடமிருந்து பெற்ற ரொக்கம்)		10,000	10,000

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகள் குமரன் என்னும் எழுதுபொருள் விற்பனையாளருடையது. பேரேட்டுக் கணக்குகளை காட்டிடுக.

2019
ஜூன் 5 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 2,00,000
8 வங்கியில் பணம் செலுத்தி வங்கி கணக்கு தொடங்கியது ₹.80,000
12 ஸ்ரீராம் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 30,000
15 செல்வா என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹.10,000
22 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹.15,000
25 ஸ்ரீராமுக்கு தேசிய மின்னனு நிதிபரிமாற்றம் மூலம் பணம் செலுத்தியது ₹. 30,000

42. கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப்பதிவில் விடுபட்ட தொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

<u>சந்திரன் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று ₹.	வரவு ₹.
2003 அக்.1	---------- ப ----------- (சந்திரன் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		1,00,000	----------
5	-------------- ப --------------------- (தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது)		15,000	----------
11	------------- ப ---------- (அறக்கட்டளைக்காக கிரிக்கெட் மட்டைகள் நன்கொடையாக வழங்கியது)		----------	5,.500
21	----------------- ப ---------------- (பங்காதாயம் வங்கியால் நேரடியாக பெறப்பட்டது)		1,000	1,000
30	----------------- ப ---------------- (வங்கிக் கட்டணம் பிடிக்கப்பட்டது)		700	700

(அல்லது)

வாகன உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

2017 அக்		₹
1	வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு	40,000
3	வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு	60,000
4	அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு	70,000
6	அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு	10,000
10	அருளின் கணக்கில் செலுத்திய தொகை	60,000
15	சந்தருக்கு கடனுக்கு விற்றசரக்கின் மதிப்பு	30,000
18	சந்தர் திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு	6,000
20	சந்தரிடமிருந்து ரொக்கம் ₹. 23,000 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது	

43. பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

(அ) முருகன் ₹. 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

(ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹.30,000.

(இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹.5,000.

(ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹. 5,000.

(உ) கூடுதல் முதல் இட்டது ₹.10,000.

(அல்லது)

கீழ்கண்ட கணக்கியல் சமன்பாட்டில் விடுபட்ட தொகையினையும், விவரங்களையும் எழுதுக

விவரம்	ரொக்கம் ₹.	சரக்கிருப்பு ₹.	அறைகலன் ₹.	வங்கி ₹.	கடனாளி ₹.	=	முதல் ₹.
ரொக்கம் மற்றும் சரக்குடன் தொழில் தொடங்கியது	+ 1,40,000	+ 60,000	0	0	0	=	-------
சமன்பாடு	+ 1,40,000	-------	0	0	0	=	+ 2,00,000
-------------	-20,000		+ 20,000	0	0	=	0
சமன்பாடு	-------	+ 60,000	--------		0	=	+ 2,00,000
வங்கியில் செலுத்தியது	--------			--------	0	=	0
சமன்பாடு	+80,000	+ 60,000	+20,000	+ 40,000	0	=	+ 2,00,000
இரவி என்பவருக்கு ₹.10,000 மதிப்புள்ள சரக்கு ₹.15,000 க்கு விற்கப்பட்டது	0	--------	0	0	--------	=	+5,000
சமன்பாடு	+80,000	+50,000	-----	+ 40,000	+15,000	=	+2,05,000

44. கீழ்க்கானும் விவரங்களைக் கொண்டு திரு. பரணி அவர்களின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்கவும்.

கணக்கின் பெயர்	தொகை ₹	கணக்கின் பெயர்	தொகை ₹
கட்டடம்	30,000	எடுப்புகள்	2,500
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	3,000	வங்கி கடன்	42,000
கடனாளிகள்	10,000	போக்குவரத்து செலவுகள்	3,500
வங்கி ரொக்கம்	16,800	சம்பளம்	5,600
காப்பீடு செலுத்தியது	1,600	முதல்	40,000
வாடகைப் பெற்றது	5,000	அறைகலன்	10,000
நற்பெயர்	5,000	மோட்டார் வாகனம்	5,000

(அல்லது)

கீழ்க்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றை சரி செய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்

விவரம்	பே.ப.எ	பற்று (₹)	வரவு (₹)
முதல்		2,49,000	
பொதுச் செலவுகள்			97,680
இயந்திரம்		1,18,680	
சம்பளம்		14,400	
வாராக் கடன்		1,100	
விற்பனை			3,30,720
கழிவு செலுத்தியது		5,500	
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு		7,700	
வங்கி மேல்வரைப்பற்று			28,600
தள்ளுபடி அளித்தது			1,210
முதலீடுகள்		24,000	
நிலம்			78,000
சரக்கிருப்பு			1,32,400
காப்பீடு			2,610
வாடகை பெற்றது			75,000
கொள்முதல்		2,10,800	
வட்டி பெற்றது		15,000	
கையிருப்பு		25,320	
கடனீந்தோர்			5,000
மொத்தம்		7,11,020	7,11,020

45. கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கொண்டு திரு. இராம் அவர்களின் விற்பனை ஏடு தயார் செய்க.

2019

ஜூலை 5. எஸ்.எஸ். டிரேடர்ஸூக்கு கடனுக்கு விற்றது:

10 நாற்காலிகள் - ஒன்று ₹. 250 வீதம்
10 மேஜைகள் - ஒன்று ₹. 850 வீதம் } 10 % தள்ளுபடி அனுமதிக்கவும்

8. இராஜாவிற்கு ரொக்கத்திற்கு விற்ற சரக்கு

15 நாற்காலிகள் - ஒன்று ₹. 250 வீதம்

20. மோகன் & கோவிற்கு விற்றது;

5 அலமாரிகள் - ஒன்று ₹. 2,200 வீதம்
10 மேஜைகள் - ஒன்று ₹.850 வீதம்

23. நாராயணனுக்கு பழைய கணிப்பொறியினை கடனுக்கு விற்றது ₹. 5,000

28. குமரனுக்கு கடனுக்கு விற்றது

8 நாற்காலிகள் நாற்காலி ஒன்று ₹. 500 வீதம்

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2019 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயாரிக்கவும்

2019

பிப்ரவரி 1 முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 12,480
பிப்ரவரி 4 சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 15,000
பிப்ரவரி 6 மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 12,100
பிப்ரவரி 7 சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு ; அதற்கு பணம் செலுத்தப்படவில்லை ₹.1,200
பிப்ரவரி 9 முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது; பணம் பெறப்படவில்லை ₹. 1,500
பிப்ரவரி 10 மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 13,300
பிப்ரவரி 14 முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது ₹. 15,200

46. பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்.

2017

ஜன 1 கைரொக்கம் ₹. 11,500

5 ரொக்க வைப்பு இயந்திரத்தின் மூலம் இராமநாதனுக்கு செலுத்தியது ₹. 300
அவர் அளித்ததள்ளுபடி ₹. 10

8 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 400

10 இராஜகோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது ₹. 980அவருக்கு அளித்த தள்ளுபடி ₹. 20

15 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹. 400

21 சாந்தி என்பவருக்கு ரொக்கம் செலுத்தியது ₹. 295 அவரிடம் பெற்றதள்ளுபடி ₹. 5

25 கூலி ரொக்கமாகச் செலுத்தியது ₹. 50

31 சஞ்சீவ் என்பவருக்கு ₹. 390 அளித்து கணக்கை முழுவதும் தீர்த்துக் கொண்ட ₹. 400

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

2019 பிப்ரவரி		₹
1	ரொக்க இருப்பு	30,000
	வங்கி இருப்பு	20,000
4	வங்கியில் செலுத்தியது	18,000
12	சுனிலிடம் பெற்ற காசோலை	12,000
	தள்ளுபடி அனுமதித்தது	300
17	கவிதாவிற்ககு வழங்கிய காசோலை	10,000
	தள்ளுபடி பெற்றது	200
18	சொந்த தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது	2,000
20	அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது	8,000

47. பின்வரும் விவரங்களிலிருந்து காமாட்சி நிறுவனத்தின் 2018 மார்ச் 31- ம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார்செய்க.

i) ரொக்க ஏட்டின் படி பற்றிருப்பு ₹. 10,500
ii) வங்கியில் செலுத்திய காசோலை ₹. 5,500 வங்கியால் வரவு வைக்கப்பட்டது. ஆனால் ரொக்க ஏட்டில் இருமுறை பதியப்பட்டது.
iii) விடுத்த காசோலை ₹. 7,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.
iv) காசோலை புத்தகக்கட்டணம் ₹. 200 வங்கியால் பற்று வைக்கப்பட்டது ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.
v) பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக வாடிக்கையாளர் செலுத்திய ₹. 1,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

(அல்லது)

பின்வரும் விவரங்களைக் கொண்டு முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்கஏட்டினைத் தயாரிக்கவும்.

2018 அக்.		₹.
1	காசாளரிடம் பெற்றது	2,500
2	கூலி கொடுத்தது	260
5	எழுது பொருட்கள் வாங்கியது	300
6	பணியாளர் பேருந்து கட்டணம்	200
12	சிற்றுண்டி செலவுகள் செய்தது	180
16	ஏற்றிச்செல் செலவுகள் செய்தது	160
20	பயணச் செலவுகள் செய்தது	188
25	போக்குவரத்துச் செலவுகள் செய்தது	320
27	வருவாய்வில்லைகள் வாங்கியது	48
28	அலுவலகச் சுத்தம் செய்ய செலவு செய்தது	140
29	பதிவு தபால்கள் அனுப்பியது	180
30	வாடகை மகிழுந்து கட்டணம் செலுத்தியது	219